# புதிய இந்தியாவின் குரல்

பல்சுவை மாத இதழ்

❖ மலர் 01 ❖ NINP (தனிச்சுற்று) ❖ இதழ் 01 ❖ செப்டம்பர் 2022 ❖ நன்கொடை ரூ.40/-



மாணவிகளுக்கு
மாதம் ரூ.1000
உதவித் தொகை

## புதுமைப்பெண் திட்டம்



புதிய சிந்தனை !
புதிய அரசியல் !!
புதிய ஆட்சி !!!
புதிய இந்தியா புதிய மக்கள் கட்சி
NEW INDIA NEW PEOPLE PARTY
नवी भारत नवी जनता पार्टी
மக்கள் பணியே !
மகத்தனா பணி !!
அதுவே எங்கள்
முதல் பணி !!!
அரசியல் என்பது
தனக்கான வாழ்வாதாரத்தை
தேடும் பணி அல்ல,
மக்களுக்கான
வாழ்வாதாரத்தை தேடி ....
உருவாக்கி கொடுக்கும் பணி ..!!!
நிர்வாகத்தை அமைத்திட வாருங்கள் ....
ஒரு அணியில் திரள்வோம் ....
சம நீதி !
சம முன்னேற்றம் !!
சம உரிமை !!!
Mr.S.SURESH Ji
NINP - NATIONAL PRESIDENT
www.newindianewpeopleparty.com
தொடர்புக்கு: 91235 47507




புதிய இந்தியா புதிய மக்கள் கட்சி
NEW INDIA NEW PEOPLE PARTY
नवी भारत नवी जनता पार्टी
கட்சி சார்பில் உங்கள் தொகுதிகளில்
நீங்களும்
M.L.A
ஆக விரும்புகிறீர்களா ?
Mr.S.Suresh Ji
NINP - National President
தொடர்புக்கு : 91235 47507
www.newindianewpeopleparty.com
நிர்வாகத்தை அமைத்திட வாருங்கள்...ஒரு அனியில் திரள்வோம்

# உள்ளே.....

புதுமைப்பெண் திட்டம் : 10
கருப்பு பட்டியல் ஆடை
உற்பத்தியாளர்கள் அதிரடி : 14
நாட்டிலேயே சிறந்த உயிரியல்
பூங்காவாக வண்டலூர் : 15
'ஜி பே' – 'பேடிஎம்' மோசடிகள் : 18
வெளிநாட்டிற்கு படிக்க
செல்கிறீர்களா? : 20
மனதை மயக்கும் மசினகுடி : 32

## புதிய இந்தியாவின் குரல்

பல்சுவை மாத இதழ்

## நிர்வாக அலுவலகம் :

விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு இந்து உதயம் மாதமிருமுறை இதழ் பொறுப்பல்ல. செய்திகளின் உண்மைத்தன்மைக்கு அந்தந்த செய்தியாளர்களே பொறுப்பு.


## புதிய இந்தியாவின் குரல்

– பல்சுவை மாத இதழ் –

புதிய இந்தியா புதிய மக்கள் கட்சி அறக்கட்டளை சார்பாக.

பதிவு எண் 14 /2022/*BK IV*

வெளியீட்டாளர்:

ஆசிரியர்:

உதவி ஆசிரியர்:

மேலான்மை இயக்குனர்:

தலைமை செய்தியாளர்:

மாநில செய்தியாளர்கள்:

மாவட்ட செய்தியாளர்கள்:

செய்தியாளர்கள்:

புகைப்பட கலைஞர்கள்:

ஆலோசகர்கள்:

சட்ட ஆலோசகர்:

Design: CHENGAI HEADLINES
Ph: 97918 35551



# “புதுமைப் பெண்” திட்டம்

## மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை

தமிழகத்தில் ஏற்கனவே இருந்த மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் தாலிக்கு தங்கம் திட்டமாக மாற்றப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் ரத்து செய்யப்பட்டு அதற்கு பதில் பள்ளி படிப்பு முடித்து உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக மாதம் ரூ.1000 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தில் பல்வேறு அம்சங்கள் சேர்க்கப்பட்டு அரசுப் பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை படித்த மாணவிகள் உயர்கல்வி அல்லது பட்டயப் படிப்பு, தொழிற்படிப்புகளில் சேரும் போது அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித் திட்டம் என்ற பெயரில் “புதுமைப் பெண்” திட்டம் என்றும் இதற்கு பெயரிடப்பட்டது. இந்த திட்டத்திற்காக தமிழக அரசு ரூ.698 கோடி ஒதுக்கி உள்ளது. இந்த திட்டத்தில் உதவித் தொகை பெற விரும்பும் மாணவிகளின் விவரங்கள் கடந்த சில மாதங்களாக கல்லூரிகளின்



முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின்

## ஆதரவற்ற மூதாட்டியை தொண்டு நிறுவனத்தில் சேர்த்த காவலர்

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கீழாத்தூரை சேர்ந்தவர் பாக்கியம் (வயது 80). ஆதரவற்ற மூதாட்டியான இவர், கடந்த சில ஆண்டுகளாக கீழாத்தூர் நாடியம்மன் கோயிலில் தங்கி இருந்தார்.பின்னர், அங்கிருந்து சமத்துவபுரத்தில் உள்ள அரசு தொடக்கப் பள் ளியில் தங்கி இருந்தார். இவருக்கு அதே ஊரைச் சேர்ந்த அறிவொளி கருப்பையா உணவளித்து பராமரித்து வந்தார். இந்நிலையில், வடகாடு காவல் நிலையத்தில் பணிபுரியும் போலீஸ்காரர் யாசர் அராபத், அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட போது, அந்த மூதாட்டியை பார்த்து, ஏதாவது உதவி தேவைப்பட்டால் உடனடியாக எண்ணுக்கு தொடர்பு கொள்ளுங்கள் என்று செல்போன் எண்ணை எழுதி கொடுத்துள்ளார். இந்நிலையில் ஒருவரின் உதவியுடன் அவரை தொடர்பு கொண்டு உடல்நிலை சரியில்லை என்று மூதாட்டி கூறியுள்ளார். உடனடியாக அங்கு வந்த யாசர்அராபத், அந்த மூதாட்டியை மீட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பின்பு உடல் நிலை சரியானதும், மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பாக்கியத்தை, மாவட்ட சமூக நல அலுவலர் கோகுலபிரியாவின் அலோசனையுடன் வல்லத்திரா கோட்டை அருகே உள்ள தொண்டு நிறுவன முதியோர் இல்லத்தில் அறிவொளி கருப்பையாவும், யாசர் அராபத்தும் சேர்த்தனர். ஆதரவற்ற மூதாட்டிக்கு உதவிய இருவரையும் பொதுமக்கள் பாராட்டினர்.



வாயிலாக சேகரிக்கப்பட்டு வந்தது.

அதன்படி சுமார் 3 லட்சம் மாணவிகள் விண்ணப்பித்துள்ளனர். இதில் முதல் கட்டமாக 1 லட்சம் மாணவிகளின் வங்கிக் கணக்குக்கு ரூ.1000 உதவித் தொகை கடந்த 5ம் தேதி முதல் இந்த திட்டம் தமிழக அரசால் முறைப்படி தொடங்கப்பட்டு அனுப்பப்படுகிறது.




சென்னை ராயபுரத்தில் உள்ள பாரதி மகளிர் கல்லூரியில் இதற்கான விழா காலையில் நடைபெற்றது.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் “புதுமைப்பெண்” திட்டத்தை தொடங்கி வைத்து மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் சிறப்பு விருந்தினராக பங்கேற்று 26 தகைசால் பள்ளிகள் மற்றும் 15 மாதிரிப் பள்ளிகள் திட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.

டெல்லியில் செயல்படும் அரசு மாதிரி பள்ளிகளை பின்பற்றி அந்த மாடலில் இந்த பள்ளிகளில் வகுப்புகளை நடத்தவும், உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் பள்ளி கல்வித்துறை திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விழாவில் அமைச்சர்கள் பொன்முடி, கீதாஜீவன், சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் இறையன்பு, கூடுதல் தலைமை செயலாளர் ஷம்பு கல்லோலிகர் மற்றும் எம்.பி., எம்.எல்.ஏ.க் கள் பங்கேற்றனர்.

# கருப்பு பட்டியல்



## ஆடை உற்பத்தியாளர்கள் அதிரடி..!

### பணம் கொடுக்காமல் ஏமாற்றும் வர்த்தகர்களுக்கு கடிவாளம்

உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்கள் பலர் இணைந்து ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை தொழில்முனைவோர் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளனர்.ஆடைகளை பெற்றுக்கொண்டு தொகை கொடுக்காமல் ஏமாற்றும் வர்த்தகர் விவரங்கள் அடங்கிய கருப்பு பட்டியல் தயாரித்து தங்கள் உறுப்பினர்களுக்கு இந்த குழுவினர் பகிர்ந்துவருகின்றனர்.

இந்தக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் கூறியதாவது: திருப்பூரில் 90 சதவீதம் குறு, சிறு, நடுத்தர பின்னலாடை உற்பத்தி நிறுவனங்களே உள்ளன. பொருளாதாரத்தின் விளிம்பில் உள்ள இந்நிறுவனங்களுக்கு தயாரித்து அனுப்பிய ஆடைக்கான தொகை உரிய காலத்தில் வெளி மாநில வர்த்தகரிடமிருந்து கிடைப்பது அவசியமாகிறது.

சில வர்த்தகர்கள் பல லட்சம் ரூபாய் மதிப்பில் ஆடை தயாரித்து பெற்றுக்கொண்டு தொகை வழங்காமல் ஏமாற்றி விடுகின்றனர். திருப்பூரில் பின்னலாடை உற்பத்தியாளர்களுக்கிடையே தகவல் பரிமாற்றத்துக்கான போதிய களம் இல்லை.இதை சாதகமாக பயன்படுத்தி, ஒரே வர்த்தகர் சுலபமாக அடுத்தடுத்து பல ஆடை உற்பத்தியாளர்களை ஏமாற்றி விடுகிறார். இதனால், வங்கி கடன் செலுத்த முடியாமை ஜாப்ஒர்க் கட்டணங்கள் செலுத்துவதில் சிக்கல், புதிய ஆர்டர்களை கையாளமுடியாமை என பின்னலாடை உற்பத்தி நிறுவனங்கள் கடும் நெருக்கடிக்குள் தள்ளப்படுகின்றன. சில உற்பத்தியாளர்கள் இனி நிறுவனத்தை இயக்கவே முடியாது என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

நாளுக்குநாள் விஸ்வரூபம் எடுத்துவரும் இந்த பிரச்சினைக்கு விரைந்து முற்றுப்புள்ளி அவசியமாகிறது.

தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கத்தில்(சைமா) உறுப்பினராக உள்ள ஆடை உற்பத்தியாளர்கள் மற்றும் சங்கம் சாராத உறுப்பினர்கள் இணைந்து புதிய குழுவை

உருவாக்கியுள்ளோம். இதுவரை 300 பேர் உறுப்பினராக உள்ளனர்.

இந்த குழுவில் உறுப்பினராக உள்ள ஆடை உற்பத்தியாளர்கள் அளிக்கும் விவரங்கள் மற்றும் பல்வேறு வகைகளில் மோசடி வர்த்தகர் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், மோசடி வர்த்தகர் விவரங்கள் அடங்கிய கருப்பு பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

இந்த பட்டியலில் இதுவரை, வெளிமாநில வர்த்தகர்கள் 60 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**greatup.in** என்கிற இணையதளத்தில் இந்த கருப்பு பட்டியல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

பதிவு செய்த குழு உறுப்பினர்கள் இந்த பட்டியலை பெறமுடியும்.

பின்னலாடை உற்பத்தியாளர்கள், ஏமாற்று வர்த்தகர் குறித்து எளிதில் தெரிந்துகொண்டு முன்னெச்சரிக்கையாக செயல்பட்டு தங்களை பாதுகாத்துக்கொள்ள இந்த பட்டியல் கைகொடுக்கிறது.

குழு உறுப்பினர் நிறுவனங்கள் இணைந்து நூல் உட்பட ஆடை தயாரிப்பு மூலப்பொருட்களை சீரான விலைக்கு, மொத்தமாக கொள்முதல் செய்வது, தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப மேம்பாட்டுக்காக தொடர் கருத்தரங்குகளும் நடத்திவருகிறோம்.

குழுவில் இணைய விரும்பும் உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்கள், 88831 33396 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.



### நாட்டிலேயே சிறந்த உயிரியல் பூங்காவாக

# வண்டலூர் பூங்கா தேர்வு

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்து அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வண்டலூரில் அமைந்துள்ளது. இங்கு 2 ஆயிரத்திற்கும் அதிகமான விலங்குகள் மற்றும் பறவைகள் உள்ளன. இந்த பூங்காவில் வெள்ளைப் புலிகள் வங்க புலிகள், சிங்கங்கள், சிறுத்தைகள், யானைகள், மனித குரங்கு காண்டாமிருகம், நீர்நாய், முதலைகள் உள்ளிட்ட ஏராளமான விலங்குகள் உள்ளது. இந்தப் பூங்காவில் கண்காணிப்பு கேமராக்கள் உதவியுடன் விலங்குகளின் செயல்பாடு நடவடிக்கைகள் தொடர்ந்து 24 மணிநேரமும் ஊழியர்கள் கண்காணித்து வருகின்றனர். இந்நிலையில், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா நாட்டில் சிறந்த உயிரியல் பூங்காவாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் நடந்த தேசிய உயிரியல் பூங்கா இயக்குநர்கள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் சிறந்த மேலாண்மை, பராமரிப்பு என்ற அடிப்படையில் 82 சதவீத புள்ளிகளைப் பெற்ற வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா நாட்டிலேயே சிறந்த உயிரியல் பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மீன் அருங்காட்சியகம்**

இந்நிலையில் கொரோனா தொற்று பரவல் காரணமாகமூடப்பட்ட மீன் அருங்காட்சியகம் ரூ.23 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்டு 28 வகையான வண்ண மீன்கள் கண்ணாடி தொட்டிக்குள் விடப்பட்டு வண்ண ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு பிறகு மீன் வடிவில் உள்ள மீன் அருங்காட்சியகம் பூங்காவுக்கு வரும் பார்வையாளர்கள் பார்க்க வசதியாக திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 'ஜிபே' – 'பேடிஎம்' மூலமாக நடக்கும் மோசடிகள்




நீங்கள் 'ஜிபே' (*GPay*), 'பேடிஎம்' (*Paytm*), 'போன்பே' (*PhonePe*)போன்ற யு.பி.ஐ. (*UPI*) 'பேமெண்ட்' செயலிகளைத்தொடர்ந்து பயன்படுத்துகிறவரா? இந்த செயலிகள் நமது பணப் பரிவர்த்தனையை மிக எளிதாக்கியிருக்கின்றன என்பது உண்மை. அதேவேளையில் இந்த செயலிகளைப் பயன்படுத்தி மோசடி செய்பவர்கள் குறித்து நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

மும்பையை சேர்ந்த 27 வயது பெண் ஆஷா ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்துவருகிறார். தோழியின் பிறந்த நாள் கேக்கை வடிவமைக்க 'விஸ்கி' பாட்டில் தேவைப்பட்டதால், ஆன்லைனில் ஒரு 'ஒயின்' கடையைத் தொடர்புகொண்டார் ஆஷா. 'ஒயின் ஷாப்பில்' இருந்த மோகன், கூகுள் பேயில் 'கியூ.ஆர்'குறியீடு மூலம் பணம் அனுப்பச் சொன்னார். அதன்படி அந்த பெண் ரூ.550 செலுத்தினார். அடுத்து 'டெலிவரி எக்ஸிகியூட்டிவ்' ஒருவர் விரைவில் உங்களை அழைப்பார் என்று மோகன் தெரிவித்தார். அதன்படி, சில நிமிடங்களில் திலீப் என்பவர் ஆஷாவை அழைத்தார்.

மதுவை 'டெலிவரி' செய்ய பதிவு கட்டாயம் என்று கூறிய திலீப், 'கூகுள் பேயை' 'ஓப்பன்' செய்து அதில் ரசீதின் எண் '19,051' என்பதைப் பதிவிடுமாறு கூறினார். ஆஷா அப்படி பதிவிட்டதைத் தொடர்ந்து அவரது வங்கி கணக்கிலிருந்து ரூ.19 ஆயிரத்து 51 'டெபிட்' செய்யப்பட்டுவிட்டது. குழப்பமடைந்த ஆஷா, திலீப்பிடம் இது பற்றி கூறியபோது, 'அதைப் பற்றி கவலைப்படவேண்டாம். எங்கள் கணினியில் பிழை ஏற்பட்டுள்ளது. முழு செயல்முறையையும் மீண்டும் செய்தால் சரியாகிவிடும்' என்று கூறினார்.

அந்த பெண் மீண்டும் அப்படி செய்தவுடன், அவரது கணக்கில் இருந்து மேலும் ரூ.19 ஆயிரத்து 51 மீண்டும் 'டெபிட்' செய்யப்பட்டது. பணத்தை திருப்பித்தருமாறு திலீப்பிடம் அந்த பெண் கேட்டபோது, கணினியில் சிக்கல் இருப்பதாகவும், அந்த தொகையை வரவு வைப்பதற்கு பதிலாக, அந்த 'புரோகிராம்' 'டெபிட்' செய்துவிடுவதாகவும் நொந்துபோய் பேசுவதுபோல் பேசி, மேலும் ஏமாற்றியுள்ளார் திலீப். 'உங்களது பணத்தைத் திரும்பப்பெறுவதற்காக உங்கள் வங்கி 'டெபிட்'

அல்லது 'கிரெடிட்' கார்டு விவரங்களை பகிர்ந்துகொள்ளுங்கள்' என்று கேட்ட திலீப்பிடம் தனது கார்டின் 'சிவிவி'(CVV) எண் மற்றும் கார்டு காலாவதி தேதி உள்ளிட்ட விவரங்களை பகிர்ந்துள்ளார் ஆஷா.

அடுத்து, 'உங்கள் வங்கி பரிவர்த்தனை வரம்பு குறைவாக உள்ளதால் பணத்தை திரும்ப செலுத்த முடியவில்லை' என்று திலீப் சொன்னவுடன் தனது வங்கி பரிவர்த்தனை வரம்பை 'ஆன்லைன்' மூலமாகவே அதிகரித்துள்ளார் ஆஷா. இதையடுத்து மறுமுனையில் இருந்த 'சைபர்' கிரிமினல்கள், பல்வேறு பரிவர்த்தனைகள் மூலமாக ஆஷாவின் கணக்கில் இருந்து ரூ.5.35 லட்சத்தை திருடி விட்டனர். தான் ஏமாற்றப்பட்டதை தாமதமாக உணர்ந்த ஆஷா 'சைபர் கிரைம்' போலீசாரிடம் புகார் அளித்துள்ளார். சென்னை போன்ற பெருநகரங்களில் 'ரியல் எஸ்டேட்' துறையிலும் 'சைபர்' கிரிமினல்கள் புகுந்துவிட்டனர்.



வீடு வாடகைக்கு விடப்படும் என்று ஆன்லைனில் விளம்பரம் வெளியிடும் வீட்டு உரிமையாளர்களை குறிவைத்து இந்த கும்பல் செயல்படுகிறது. இந்த கும்பலில் ஒருவன், வீட்டு உரிமையாளரை செல்போனில் அழைத்துப் பேசுவான். வீடு எங்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது என்றும், அட்வான்ஸ் தொகையை உங்களுக்கு 'ஜிபே' மூலமாக அனுப்பி வைக்கிறோம் என்றும் ஆசை காட்டுவான். 'முதலில் உங்களுக்கு சாம்பிளுக்காக 'ஜிபே' மூலமாக ஒரு ரூபாய் அனுப்பியுள்ளேன். அந்த ஒரு ரூபாயை உங்கள் வங்கி கணக்கில் இருந்து இந்த 'லிங்க்' க்கு திருப்பி அனுப்புங்கள். அதைவைத்து உங்களுக்கு 'அட்வான்ஸ்' தொகையை மொத்தமாக அனுப்பிவிடுவேன்' என்று கூறி, ஒரு 'லிங்க்'-கை அனுப்புவான். அந்த 'லிங்க்' வீட்டு உரிமையாளரின் வங்கி கணக்கு விவரங்களை திருடிவிடும் 'மால்வேர்' ஆகும். அதையும், உரிமையாளர் சொல்லும் தகவல்களையும் வைத்து வீட்டு உரிமையாளரின் வங்கி சேமிப்பு முழுவதையும் கொள்ளை அடித்துச் செல்கிறது இந்த 'சைபர்' கிரிமினல் கும்பல். இதுபோன்ற மோசடிகளில் சிக்காமல் இருக்கவேண்டுமானால், 'ஜிபே', 'பேடிஎம்' போன்ற 'யு.பி.ஐ.' 'பேமெண்ட்' செயலிகளை மிகுந்த எச்சரிக்கையுடன் பயன்படுத்துங்கள். 'பேமெண்ட்' செயலிகளின் 'பாஸ்வேர்ட்', 'கியூ.ஆர்' குறியீடு போன்றவற்றை யாரிடமும் பகிர்ந்து கொள்ளவேண்டாம். நீங்கள் வீட்டு உரிமையாளராக இருந்தால், வாடகைக்கு வருபவரை நேரில் பார்க்காமலும், அவரது சுய விவரங்களை சோதிக்காமலும் 'ஆன்லைன்' முறையில் பணம் வாங்கவோ, கொடுக்கவோ வேண்டாம்.

**– முன்னாள் போலீஸ் டி.ஜி.பி. முனைவர் மு.ரவி**

# மாணவர்களே வெளிநாட்டுக்கு படிக்க செல்கிறீர்களா?

வெளிநாட்டுக்கு உயர்கல்வி படிக்க செல்லும் ஆர்வமும், மோகமும் மாணவர்களிடம் மேலோங்கி உள்ளது. அங்குள்ள பல்கலைக்கழகங்களில் இணைந்து படிப்பை தொடர்வதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வெளிநாட்டுக்கு சென்று படிக்க முடிவு செய்துவிட்டால் முதலில் மேற்கொள்ள வேண்டிய விஷயம் விசாவுக்கு விண்ணப்பிப்பதுதான். அங்கு எத்தனை ஆண்டு கல்வி கற்க போகிறீர்கள் என்பதை குறிப்பிட்டு கல்வி விசாவுக்கு விண்ணப்பித்துவிட வேண்டும். அதை விட முக்கியமான விஷயம் விசாவுக்கு விண்ணப்பித்திருக்கும் தகவலை பல்கலைக்கழகத்துக்கு தெரியப்படுத்துவதுதான். ஏற்கனவே விசா பெற்றிருந்தாலோ, காலதாமதமாக விசா கிடைக்கும் என்றாலோ அது பற்றியும் பல்கலைக்கழகத்துக்கு உடனே தெரியப்படுத்திவிட வேண்டும். அங்குள்ள பல்கலைக்கழகத்தில் அட்மிஷன் கிடைத்துவிட்டால் உடனே கல்வி கட்டணத்தை செலுத்த வேண்டியிருக்கும். அதற்கு தேவையான பணத்தை முன்கூட்டியே தயார் செய்துவிட வேண்டும். பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் தவணை முறையில் பணம் செலுத்தும் வசதிகள் உள்ளன. அந்த வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்ளலாம். அங்கு பல்வேறு நாடுகளை சேர்ந்த மாணவர்களுடனும், அவர்கள் பின்பற்றும் கலாசாரங்களுடன் இணைந்து வாழவும் பழகிக்கொள்ள வேண்டியிருக்கும். அதனால் அங்கு செல்வதற்கு முன்பே அங்குள்ள கலாசாரங்களை தெரிந்து கொள்வது சிறப்பானது. இணைய தளங்களும், யூடியூப் வீடியோக்களும் அதற்கு உதவும். வெளிநாடுகளில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பல்வேறு நோய் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும். பெரும்பாலான பல்கலைக்கழகங்கள், அங்கு சேருவதற்கு முன்பு போட வேண்டிய தடுப்பூசிகளின் பட்டியலை வெளியிட்டிருக்கும். அதில் தட்டம்மை, ரூபெல்லா, ஹெபடைடிஸ் பி, கொரோனா தடுப்பூசிகள், பூஸ்டர்கள் ஆகியவை அடங்கும். சர்வதேச பயணங்கள் மேற்கொள்வதற்கு முன்பு கொரோனா தடுப்பூசி



அடுப்படி

**சாக்லேட், தேங்காய் சேர்த்து சூப்பரான ஸ்நாக்ஸ் செய்யலாம் வாங்க....**



தேவையான பொருட்கள்:

தேங்காய் துருவல் - 200 கிராம் மேரி பிஸ்கட் ( *Marie gold biscuits*) - 10 சாக்லேட் பவுடர் - 4 ஸ்பூன் வெண்ணிலா எசன்ஸ் - அரை டீஸ்பூன் கன்டன்ஸ்டு மில்க் - 150 கிராம் பால் - அரை கப் வெண்ணெய் – 2 டீஸ்பூன் (உருகியது) அலங்கரிக்க தேங்காய் துருவல் - தேவையான அளவு

செய்முறை: மேரி பிஸ்கட்டை மிக்சியில் போட்டு பொடித்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் பொடித்த பிஸ்கட் தூள், சாக்லேட் பவுடர், தேங்காய் துருவல் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும். ஒரு நான்ஸ்டிக் பாத்திரத்தை அடுப்பில் அதில் கலந்து வைத்துள்ள பிஸ்கட் கலவையை சேர்த்து அதனுடன் கன்டன்ஸ்டு மில்க், உருக்கிய வெண்ணெய், வெண்ணிலா எசன்ஸ், பால் சேர்த்து நன்றாக கலந்து அடுப்பை மிதமான தீயில் வைத்து நன்றாக கிளறிக்கொண்டே இருக்கவும். இந்த கலவை நன்றாக சுருண்டு பாத்திரத்தில் ஒட்டாமல் வரும் போது இறக்கி ஆறவிடவும். ஆறிய மாவை சிறிய உருண்டைகளாக பிடித்து தேங்காய் துருவலில் பிரட்டி வைக்கவும். இதை பிரிட்ஜில் வைத்து செட் ஆனவுடன் எடுத்து பரிமாறவும். அருமையான சாக்லேட் தேங்காய் பால்ஸ் ரெடி. இதை பிரிட்ஜில் ஒரு வாரம் வரை வைத்திருந்து சாப்பிடலாம்.

போட்டுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மற்ற தடுப்பூசிகளில் எவையெல்லாம் அவசியம் போட வேண்டும் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு அதற்கேற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். விமான டிக்கெட் புக்கிங் செய்வதற்கு காலம் தாழ்த்தக்கூடாது. அங்கு சென்று படிப்பது உறுதியாகிவிட்ட உடனேயே விமான டிக்கெட் புக்கிங் செய்துவிடுவதுதான் நல்லது.

கடைசி நேரத்தில் புக்கிங் செய்வது தேவையற்ற பதற்றத்தை வரவழைக்கும். டிக்கெட்டின் விலையும் அதிகமாக இருக்கும். ஆரம்பத்திலேயே டிக்கெட் முன் பதிவு செய்யும்போது சவுகரியமான பயணத்திற்கு திட்டமிட்டு விடலாம்.

பயண சலுகைகளையும் பெறலாம். வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும்போது பண விஷயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

கூடுமானவரை டிஜிட்டல் பணமாக வைத்திருப்பதுதான் சிறந்தது. அங்கு பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் சர்வதேச வங்கிகளின் ஏ.டி.எம்., கிரிடிட் கார்டுகளை கைவசம் வைத்திருப்பது நல்லது.

அத்தகைய கார்டுகளை பயன்படுத்துவது பாதுகாப்பானது. வெளிநாட்டில் வங்கிக்கணக்கைத் திறக்கும் வரை ஆன்லைனில் பணம் செலுத்துவதற்கு அவற்றை பயன்படுத்தலாம். வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன்பு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வது அவசியமானது.

அவசிய தேவை இருப்பின் டாக்டர்கள் பரிந்துரைத்த மருந்து, மாத்திரைகளின் சீட்டுகளை உடன் எடுத்துச் செல்லலாம்.

இரண்டு வாரங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை எடுத்து செல்லலாம். அந்த பொருட்களை விமானத்தில் எடுத்து செல்ல அனுமதி இருக்கிறதா? என்பதை சரிபார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியமானது.

விமான வழிகாட்டு நெறிமுறைகளை படித்து பார்த்துவிட்டு பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

சில நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்படும் விஷயங்கள் மற்ற நாடுகளில் தடை செய்யப்பட்டதாக இருக்கலாம். அதனால் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

# அரசு விரைவு பேருந்துகளில் புதிய சலுகை...!

**அரசு விரைவு பேருந்தில் சொந்த ஊருக்கு சென்றால் திரும்பி வரும்போது டிக்கெட்டுக்கு 10 சதவீதம் தள்ளுபடி ...**

அரசு விரைவு பேருந்துகளில் தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்பவர்களுக்கு இணையதளம் மூலம் முன் பதிவு செய்தால் திரும்பி வரும் டிக்கெட் கட்டணத்தில் 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த புதிய நடைமுறை தற்போது அமலுக்கு வந்துள்ளது. இதுதொடர்பாக அரசு விரைவு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது:

300 கிலோ மீட்டருக்கு அதிக தொலைவில் உள்ள மாவட்டங்களுக்கு இயக்கப்படும் பேருந்துகளில் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கான வசதி கடந்த 2006-ம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. தற்போது இணையதளம் மற்றும் செல்போன் செயலி மூலம் ஒரு மாதத்துக்கு முன்பே டிக்கெட்டை முன் பதிவு செய்து கொள்ளலாம்.




இந்த நிலையில் அரசு விரைவு போக்குவரத்து கழகம் புதிய சலுகையை வழங்கி வருகிறது. பயணிகள் நீண்ட தூர பேருந்துகளில் பயணம் செய்வதை ஊக்குவிக்கவும், தனியார் ஆம்னி பேருந்துகள் மற்றும் ரெயில்களில் பயணம் செய்பவர்களை தங்கள் பக்கம் இழுக்கவும், இணையதளம் மூலமாக இருவருக்கு டிக்கெட் முன் பதிவு செய்யும் பயணிகளுக்கு 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என்று அமைச்சர். சிவ சங்கர் சட்ட சபையில் அறிவித்தார்.

இந்த அறிவிப்பு தற்போது அமல் படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஒரேநேரத்தில் சொந்த ஊர்களுக்கோ அல்லது வெளியூர்களுக்கோ சென்று வருவதற்கான டிக்கெட்டை இணையதளம் முலம் முன்பதிவு செய்தால் திரும்பி வருவதற்காக டிக்கெட் கட்டணத்தில் 10 சதவீதம் சலுகை வழங்கப்படுகிறது. ஆனால் விழா நாட்களில் இந்த சலுகை பொருந்தாது.

இதர நாட்களில் இந்த சலுகை கிடைக்கும். இந்த சலுகையை பெற விரும்பும் பயணிகள் **https://www.tnstc.in** என்ற இணையதளம் அல்லது **tnstc** என்ற செல்போன் செயலியை அணுகி பலன் பெறலாம். அரசு விரைவு போக்கு வரத்து கழகத்தின் கீழ் அதி நவீன மிதவை பேருந்து, குளிர் சாதன பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, கழிப்பறை வசதியுடன் கூடிய பேருந்துகள் என மொத்தம் 1082 பஸ்கள் இயக்கப்படுகின்றன.

தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி மாநிலங்களுக்கும் சேர்த்து மொத்தம் 251 வழித்தடங்களில் இந்த பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த அனைத்து பேருந்துகளிலுமே பயணிகள் சலுகையை பெறலாம்.



# பிளாஸ்டிக் இல்லா கொடைக்கானல்

சுற்றுலா நகரான கொடைக்கானலில் பிளாஸ்டிக் பயன்பாடை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலா பயணிகள் பிளாஸ்டிக் கேன்கள், பாட்டில்கள் கொண்டுவருவதை தடுக்க சோதனைச்சாவடி அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டும் வருகிறது. இதுதவிர கொடைக்கானலில் டாஸ்மாக் கடைகளில் மதுபாட்டில்கள் வாங்கி உபயோகித்தபின் வீசி எரிவதை தடுக்க அதனை திரும்ப ஒப்படைத்து பணம் பெற்றுக்கொள்ளும் நடைமுறையும் அமலில் உள்ளது. இருந்தபோதும் நகரின் பல்வேறு சுற்றுலா தலங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் சிதறிகிடப்பதை காணமுடிகிறது. இதனால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் இதனை உண்ணும் வனவிலங்குகளும் உயிரிழந்து வருகின்றன.

இந்நிலையில் கொடைக்கானல் வந்த அமெரிக்காவை சேர்ந்த சுற்றுலா பயணி கடந்த சில நாட்களாக நகரின் பல்வேறு பகுதிகளில்கிடந்த பிளாஸ்டிக் பொருட்களை அகற்றி வருகிறார். பிளாஸ்டிக்கால் ஏற்படும் தீமைகள் குறித்து சுற்றுலா பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் அதனை தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுத்து வருகிறார். இயற்கையை பாதுகாப்போம் என்பதை வலியுறுத்தி அமெரிக்கா இளைஞர் ஏற்படுத்தி வரும் நூதன விழிப்புணர்வு சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.


## சுற்றுலா பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திய அமெரிக்க இளைஞர்...!


**இளைஞர்கள் மத்தியில் மிக பிரபலமாக இருக்கும் ஒரு இடத்தின் பெயர் மசினக்குடி. மலைகளின் ராணி எனப்படும் ஊட்டியிலிருந்து மைசூரு செல்லும் வழியில் 30கிமீ தொலைவில் உள்ளது காடுகள் சூழ்ந்த இயற்கை காடுகள் வழி சுற்றுலா அனுபவத்தைப் பெற விரும்புவோர், இங்கே கட்டாயம் சென்று வர வேண்டும். அப்படியென்ன சிறப்புகள் நிறைந்திருக்கிறது**



# மனதை மயக்கும் மசினகுடி

மலைகளின் ராணி எனப்படும் ஊட்டியிலிருந்து மைசூரு செல்லும் வழியில் 30கிமீ தொலைவில் உள்ளது காடுகள் சூழ்ந்த இயற்கை கொடையான அழகியமசினகுடி கிராமம். ஊட்டிக்கு மிக அருகில் மசினகுடி இருந்தாலும், வணிகமயமாக்கப்பட்ட சுற்றுலா தலங்கள் போல் மாசடையாமல் இருக்கிறது, எங்கு பார்த்தாலும் காடுகள், இங்கு மான்கள், யானைகள், பறவைகள், குரங்குகள், காட்டெருமைகள் என பலதரப்பட்ட மிருகங்களை எளிதில் பார்க்கலாம். இந்த இயற்கைகையை உருக்குலையாமல் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றுவது இங்குள்ள மண்ணின் மைந்தர்களான பழங்குடி மக்களே.







மசினகுடியில் தெப்பக்காடு யானைகள் முகாம், சவாரி, தேயிலைத் தோட்டங்கள், கோபாலசுவாமி பெட்டா கோயில், கல்லிகுடர் ரப்பர் தோட்டங்கள், முதுமலை வனவிலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம் போன்ற இடங்களுக்கு சென்று சுற்றிப்பார்க்கலாம்.

**தமிழகத்தின் முதல் வனவிலங்கு காப்பகம்!**

அழிவின் விளிம்பில் இருந்த தேசிய விலங்கான புலிகளைக் காப்பதற்காக, தமிழத்தில்

அமைக்கப்பட்ட முதல் வனக்காப்பகம், முதுமலை. இது 1940ல் நிறுவப்பட்ட இந்த சரணாலயம், தமிழக, கேரள, கர்நாடக மாநிலங்கள் இணையும் அடர்காடுகளில் அமைத்திருப்பது இதன் சிறப்பு. .

முதுமலைச் சரணாலயம், மசினகுடி, தெப்பக்காடு, முதுமலை, கார்குடி, மற்றும் நெல்லகோட்டா என ஐந்து வனச்சரகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. சரணாலயத்தினுள் முதலில் செல்லவேண்டிய இடம், தெப்பக்காடு யானைகள் முகாம்.

**யானை சவாரி!**

1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தெப்பக்காடு யானை முகாமில், யானை சவாரி செய்யலாம். தவிர, யானைகளின் உணவு இடைவேளைகளில் யானைகளைக் கண்டு ரசிக்கலாம்.

காட்டுக்குள் ஓடும் ஒரு சிறு ஓடைதான் தமிழக - கர்நாடக எல்லையைப் பிரிக்கும் கோடு. அந்தப் பக்கம் பந்திப்பூர் வன விலங்குச் சரணாலயம். அங்கும் சவாரி, ட்ரெக்கிங் போன்றவை உண்டு. அப்படியே பந்திப்பூரைக் கடந்து குண்டக்கல் என்ற ஊரில் இடதுபுறம் செல்லும் சாலையைப் பிடித்து சில கி.மீ தூரம் சென்றால், கேரளா மாநிலத்தின் வயநாடு வன விலங்குகள் சரணாலயம் இருக்கிறது.

அங்கிருந்து மசினகுடிக்கு திரும்பும் வழியும் இருக்கிறது.

**மாயாறு!**

இங்கு வளமாகப் பாயும் மாயாறு சுவையான, சுத்தமான குடிநீரை அனைவருக்கும் அளிப்பதால், மினரல் வாட்டர் பாட்டில்களை யாரும் தூக்கிச் சுமக்கத் தேவையில்லை.

**மர உச்சியில் தங்கலாம்!**

மரத்தாலான வீடு, மர உச்சியில் வீடு, பழங்குடியினர் குடிசை, காட்டுக்குள் வீடு, குடில், தனியார் தங்கும் விடுதி என விதவிதமான தங்கும் வசதிகள் உள்ளன.

காட்டிற்குள் தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டிருப்பதால் விலங்குகளை துன்புறுத்தாத வகையில் இரவு நேரங்களில் மங்கலான ஒளி வீசும் விளக்குகள் மட்டுமே இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

**செல்லும் வழி!**

ஊட்டியில் இருந்து மைசூர் நெடுஞ்சாலையில் கூடலூர் வழியாகவும் செல்லலாம். அல்லது கல்லட்டி வழியாகவும் செல்லலாம். ஈரோடு

சத்தியமங்கலத்தில் இருந்து சாம்ராஜ்நகர் வழியாக குண்டக்கல், பந்திப்பூர் வழியாக மசினகுடி வரலாம். மலை ஏறி இறங்க யோசிப்பவர்களுக்கு ஒரே வழி, பெங்களூரு

மைசூரு வழியாகச் சுற்றிக்கொண்டு வர வேண்டும்.


## புதிய இந்தியாவின் குரல் இதழில் விளம்பரம் செய்ய :

| TARIFF COLOUR | AMOUNT | TARIFF B/W | AMOUNT |
|---|---|---|---|
| 2nd Page Inner | | Full Page | |
| Last Page Inner | | Half Page | |
| Last Page | | Quater Page | |
| | | Bottom Page | |

## Advertisement Contact:

[redacted]

# உங்கள் வியாபாரம் பெருக.!

## பல அற்புத தகவல்களை




# தாங்கி வெளிவரும்

**நமது இதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்...**



புதிய சிந்தனை !
புதிய அரசியல் !!
புதிய ஆட்சி !!!
MR.S.SURESH SUBRAMANIYAM
NINP - NATIONAL PRESIDENT
புதிய இந்தியா புதிய மக்கள் கட்சி
NINP
NEW INDIA NEW PEOPLE PARTY
புதிய இந்தியா புதிய மக்கள் கட்சி
NEW INDIA NEW PEOPLE PARTY
नवी भारत नवी जनता पार्टी
புதிய இந்தியா புதிய மக்கள் கட்சியில்
இன்றே இணைந்திடுவீர்
நிர்வாகத்தை அமைத்திட வாருங்கள்...ஒரு அணியில் திரள்வோம்
Office Address
வழிகாட்டுதல் தொடர்புக்கு : 91235 47507
உறுப்பினர்களுக்கு காப்பீடு மற்றும் விபத்துக்காப்பீடு NINP வழங்கி வருகிறது.
www.newindianewpeopleparty.com

கட்டுங்கள்
உங்கள் கனவு
இல்லத்தினை
எங்களுடன்
இணைந்து..!



# KAIRASI CONSTRUCTIONS

## 90%

ரூ.2.67 லட்சம் மானியத்துடன்
வீட்டு கடன் வசதி செய்துதரப்படும்

**97918 35551 / 82207 20534**

சதுர அடி

**Rs. 2100/-**

மட்டுமே..!